بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 11/09/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் பிலால் பின் ரபாஹ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۬ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபியின் பெயர் ஹஸ்ரத் பிலால் பின் ரபாஹ் ஆகும். ஹஸ்ரத் பிலால் அவர்கள் உமைய்யா பின் கலஃப் என்பவனின் அடிமையாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் பிலால் அவர்கள் கருமை கலந்த கோதுமை நிறத்தை உடையவர்களாக இருந்தார்கள்; ஒல்லியான தேகம் உடையவர்களாக இருந்தார்கள்; அடர்த்தியான தலைமுடி உடையவர்; கண்ணத்தில் மிக குறைவான சதையுடையவராக இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்கள் பல்வேறு திருமணம் புரிந்திருந்தார்கள். அவர்களுடைய சில மனைவிகள் அரபு நாட்டினுடைய மிகவும் நல்ல, கண்ணியத்திற்குரிய வீட்டை சார்ந்தவர்களாக இருந்தார்கள். அன்னாருடைய ஒரு மனைவியின் பெயர் ஹாலா பின்த் அவ்ஃப் ஆகும். இவர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களின் சகோதரி ஆவார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு ஒரு சகோதரர் இருந்தார். அவருடைய பெயர் காலிது என்பதாகும். மேலும், ஒரு சகோதரி இருந்தார். அவருடைய பெயர் ஃகுஃபைரா என்பதாகும்.

ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், بِلَالٌ سَابِقُ الْحَبَشَه பிலால் அபிசீனியர்களில் முதன்மையானவர்கள் ஆவார்கள் என்று கூறினார்கள்.

உர்வா பின் சுபைர் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது, அவர் தனது மார்க்கத்தை விட்டு முகம் திருப்பி விட வேண்டும் என்பதற்காக துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால் அந்த மக்கள் விரும்பிய அந்த வார்த்தைகளை இவர்கள் ஒருபோதும் கூறியது கிடையாது. அதாவது அல்லாஹ்வை இவர்கள் மறுத்தது கிடையாது. மக்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு தண்டனை கொடுப்பதில் கடுமை காட்டும் போது, ஹஸ்ரத் பிலால் அவர்கள் அஹது, அஹது என்று கூறுவார்கள்.

ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் பிலால் அவர்கள் நம்பிக்கை கொண்ட போது அவருடைய எஜமானர்கள் அவரை பிடித்து நிலத்தில் கிடத்தினார்கள். அவர் மீது கூழாங்கற்களையும், மாட்டினுடைய தோலையும் போட்டார்கள். உன்னுடைய இறைவன் லாத் மற்றும் உஸ்ஸா ஆகும் என்றார்கள். ஆனால் அன்னாரோ அஹது, அஹது என்றே கூறினார்கள். அவருடைய எஜமானர்களிடத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் வந்தார்கள். எப்பொழுது வரை நீங்கள் இந்த மனிதனுக்கு துன்பம் கொடுப்பீர்கள்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், பிலால் அவர்களை ஏழு ஊக்கியாவுக்கு விலைக்கு வாங்கி அவரை விடுதலை செய்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அபூபக்ர் அவர்கள் துன்பமளிக்கப்பட்டு வந்த ஏழு அடிமைகளை விடுதலை செய்திருந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் பிலால், ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா அவர்களும் அடங்குவார்கள். ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுவது என்னவென்றால், ஹஸ்ரத் உமர்

அவர்கள், அபூபக்ர் நம்முடைய தலைவர் ஆவார். மேலும் அவர்கள் நம்முடைய தலைவரை விடுதலை செய்துள்ளார்கள் என்று கூறி வருவார்கள். அதாவது பிலால் அவர்களை விடுதலை செய்துள்ளார்கள் என்று கூறி வருவார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

“இறைவன் முஸ்லிம்களுக்கு மதீனாவில் நிம்மதியை வழங்கிய போது, அவர்கள் சுதந்திரமாக இறைவணக்கம் செய்வதற்கு தகுதியானவர்களாக ஆன போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிலால் அவர்களை பாங்கு கொடுப்பதற்காக நியமித்தார்கள். இந்த அபிசீனிய அடிமை பாங்கில் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதற்கு பதிலாக அஸ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறும்போது, அவருடைய நிலைமைகளைக் குறித்து அறியாத மதீனாவாசிகள் சிரிப்பார்கள். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், பிலாலின் பாங்கோசையை கேட்டு அம்மக்கள் சிரிப்பதைக் கண்டு, அம்மக்களை திரும்பிப் பார்த்து, நீங்கள் பிலாலுடைய பாங்கை கேட்டு சிரிக்கிறீர்கள். ஆனால் அவருடைய பாங்கோசை கேட்டு இறைவன் அரியணையில் மகிழ்ச்சி அடைகிறான் என்று கூறினார்கள். அன்னார் சுட்டிக்காட்டிய விஷயம் என்னவென்றால், இவர் “ஷீன்” என்று உச்சரிக்க முடியாததை நீங்கள் பார்க்கின்றீர்கள். ஆனால் ஷீன் மற்றும் ஸீன் என்ற உச்சரிப்பில் என்ன உள்ளது? கொதிக்கின்ற மணலில் வெறும் முதுகுடன் அவர் கிடத்தப்படுவார். அவருடைய நெஞ்சின் மீது அநீதியாளர்கள் தமது செருப்புடன் குதிப்பார்கள். இப்பொழுதாவது படிப்பினை பெற்றீரா, இல்லையா? என்று அவரிடம் கேட்கப்படும். அப்போது ஹஸ்ரத் பிலால் அவர்கள், தாம் மிக குறைவாக அறிந்த அந்த மொழியில் அஹது, அஹது என்று கூறி இறைவனுடைய ஏகத்துவத்திற்கான அறிவிப்பை செய்து கொண்டிருப்பார்கள். மேலும் தமது விசுவாசம், தமது ஏகத்துவத்திற்கான கொள்கை மற்றும் தமது உள்ளத்தின் உறுதிக்கான சான்றை கொடுப்பார்கள். ஆகவே அவருடைய அஸ்ஹது என்ற உச்சரிப்பு அநேக மக்களுடைய அஷ்ஹது என்ற உச்சரிப்பை விட மிக விலை மதிப்பானதாகும் என்றார்கள்.

ஹஸ்ரத் பிலால் அவர்கள், முதன்மையானவர்களில் முன்னோடியாக கணக்கிடப்படுகிறார்கள். **ஹஸ்ரத் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவிப்பு செய்த போது, அப்பொழுது ஏழு நபர்கள்தான் அவ்வாறு அறிவிப்பு செய்யும் நல்வாய்ப்பை பெற்றிருந்தார்கள்.**

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஆரம்ப காலத்தில் நம்பிக்கை கொண்ட சம்பவத்தைப் பற்றி எடுத்துரைக்கும்போது ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் கப்பாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முதன்மையானவர்களில் முன்னோடி சஹாபியாக இருக்கின்றார்கள். இவர்கள் முதலில் பைஅத் செய்தார்களா அல்லது பிலால் முதலில் பைஅத் செய்தார்களா என்பதில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஏனென்றால் ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஒரு அடிமையும் ஒரு சுதந்திரமானவரும் முதன் முதலில் என்னை ஏற்றுக் கொண்டார்கள் என்று கூறியிருக்கிறார்கள். சிலர் அது ஹஸ்ரத் பிலால் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் ஆகியோர் ஆவார்கள் என கூறுகிறார்கள். இன்னும் சிலரோ இது கப்பாப் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் ஆகியோரைக் குறிக்கும் என்று கூறுகிறார்கள்.

திப்காத்துல் குப்ரா என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது, **ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் பத்ர், உஹது, அகழ் உட்பட மற்ற அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டுள்ளார்கள்.** பத்ர் யுத்தத்தில் ஹஸ்ரத் பிலால் அவர்கள் உமையா பின் கலஃப் என்பவனை கொன்றார்கள். அவன் இஸ்லாத்தினுடைய மிகப் பெரும் எதிரியாக இருந்தான். ஹஸ்ரத் பிலால் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக அவர்களுக்கு துன்பமிழைத்து வந்தான். உமையா பின் கலஃப் கொலை செய்யப்பட்ட சம்பவம் புகாரியில் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் குபைப் பின் இஸாஃப்

அவர்களைப் பற்றிய குறிப்பில் இதற்கு முன்பு நான் கூறியிருக்கிறேன். ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய செயலாளராகவோ அல்லது பொருளாளராகவோ இருந்தார்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் கூறினார்கள்: அல்லாஹ்வுக்காக எனக்கு எந்த அளவு துன்பம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், எவருக்கும் இது போன்று துன்பம் கொடுக்கப்பட முடியாது. அல்லாஹ்வுக்காக நான் எந்த அளவு பயமுறுத்தப்பட்டுள்ளேன் என்றால் இந்த அளவு எவரும் பயமுறுத்தப்படவில்லை. எனக்கும் பிலாலுக்கும் உணவு இல்லாத மூன்று இரவுகள் வந்துள்ளன. பிலாலுடைய அக்குளில் ஒளித்து வைக்கும் அளவிலான, எந்த ஒரு உயிரினமும் உண்ண முடியாத அளவிலான உணவு மட்டுமே இருக்கும். அதாவது, மிக மிக குறைவான அளவில் மட்டுமே உணவு இருக்கும்.

ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு முதன் முறையாக பாங்கு கூறக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. **ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய முழு வாழ்விலும், பயணம் மற்றும் பயணமல்லாத தருணங்களில் அன்னாரின் முஅத்தின் ஆக (பாங்கு சொல்லக் கூடியவராக) ஹஸ்ரத் பிலால் இருந்திருக்கிறார்கள். இஸ்லாத்தில் முதன் முறையாக பாங்கு கூறியவர் இவரே ஆவார்.**

முஹம்மது பின் அப்துல்லாஹ் பின் ஸைது அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தொழுகைக்கு மக்களை அழைப்பதற்காக கொங்கு ஊதலாமா அல்லது முரசு கொட்டலாமா என்று ஆலோசனை செய்தார்கள். பிறகு, **அப்துல்லாஹ் பின் ஸைது அவர்களுக்கு கனவு காட்டப்பட்டது. அவர்கள் கூறுகிறார்கள்; நான் கனவில் ஒரு மனிதனைக் கண்டேன். அவர் இரண்டு பச்சை நிற உடைகளை அணிந்திருந்தார். அவரது கையில் கைக்கொட்டு ஒன்றை வைத்திருந்தார். நான் கனவில் அவரிடம், அல்லாஹ்வின் அடியாரே! அந்த கைக்கொட்டை எனக்குத் விலைக்கு தருவீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர், இதனைக் கொண்டு என்ன செய்வீர்கள்? என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான், இதன் மூலமாக தொழுகைக்கு அழைப்பேன் என்று கூறினேன். அதற்கு அந்த மனிதர், இதை விட சிறந்ததை உங்களுக்கு நான் கூறட்டுமா? என்று கேட்டார். அதற்கு நான், அது என்ன என்று கேட்டேன். அவர் பாங்கின் வாசகங்களை எனக்கு கூறினார்.** அறிவிப்பாளர் கூறுகின்றார்; பிறகு அப்துல்லாஹ் பின் ஸைது அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, தாம் கனவில் கண்ட அனைத்து விஷயங்களையும் எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், உங்களுடைய நண்பர் கனவு கண்டுள்ளார் என்று கூறினார்கள். பிறகு அப்துல்லாஹ் பின் ஸைது அவர்களிடம், நீங்கள் பிலாலுடன் பள்ளிவாசலுக்கு செல்லுங்கள். அவருக்கு இந்த சொற்களை கூறிக் கொண்டே செல்லுங்கள். அவர் இதை உரத்த குரலில் கூறுவார். ஏனென்றால், அவர் உங்களை விட உரத்த குரல் உடையவர் என்றார்கள். அப்துல்லாஹ் பின் ஸைது அவர்கள் கூறுகிறார்கள். நான் பிலாலுடன் பள்ளிவாசலுக்கு சென்றேன். நான் அந்த சொற்களை கூறிக்கொண்டே சென்றேன்; அவர் உரத்த குரலில் அதை கூறிக்கொண்டே வந்தார். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்களுக்கு இந்த குரல் கேட்ட போது, அவர் வெளியேறி வந்தார். அவர் ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், இவர் கனவில் கண்ட அதேயேதான் நானும் கனவில் கண்டேன் என்று கூறினார்கள். இன்னொரு அறிவிப்பில் எவ்வாறு வருகிறது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாங்கின் சொற்களைக் கேட்ட போது, இதற்கேற்பவே இறை அறிவிப்பும் வந்துள்ளது என்று கூறினார்கள். சுருக்கமாக, இவ்வாறு தற்போதைய பாங்கினுடைய வழிமுறை ஆரம்பித்தது. ஆரம்பிக்கப்பட்ட இந்த வழிமுறை எந்த அளவுக்கு அருளுக்குரியதாகவும், உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும் இருக்கிறது என்றால் வேறு எந்த வழிமுறையும் இதனுடன் போட்டியிட முடியாது. ஒவ்வொரு நாளும் ஐவேளையில்,

இஸ்லாமிய உலகின் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும், ஒவ்வொரு பள்ளிவாசலிருந்தும் இறைவனுடைய ஏகத்துவம் மற்றும் முஹம்மது ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தூதுத்துவத்தின் குரல் ஓங்கிக் கொண்டிருக்கின்றது. மேலும் இஸ்லாமிய போதனைகளின் சாராம்சம் மிக அழகிய முறையில், சுருக்கமான சொற்களின் மூலமாக மக்கள் வரை சென்றடைய வைக்கப்படுகின்றது.

மூசா பின் முஹம்மது தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள். ‘‘ஹஸ்ரத் பிலால் அவர்கள் பாங்கு கொடுத்த பிறகு ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தகவல் கொடுக்க விரும்பினால், அன்னாருடைய வீட்டு வாசலில் நின்று கொண்டு, ஹய்ய அலஸ் ஸலாஹ்; ஹய்ய அலல் ஃபலாஹ்; அஸ்ஸலாத்து யா ரஸூலல்லாஹ் என்று கூறுவார்கள். அதாவது தொழுகைக்கு வாருங்கள்; வெற்றிக்காக வாருங்கள்; இறைத்தூதரே! தொழுகைக்காக வாருங்கள் என்று கூறுவார்கள். தொழுகைக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியேறுவதை பிலால் அவர்கள் காணும் போது, அவர்கள் இ(க்)காமத் கொடுக்கத் தொடங்கி விடுவார்கள்.’’

இந்த விஷயம் தெளிவாக இல்லை. இ(க்)காமத் என்பது இமாம் தொழுகைக்காக தொழும் இடத்தில் நிற்கும் போது கூறப்படுகிறது.

சுனன் இப்னு மாஜாவில் ஹஸ்ரத் பிலால் அவர்களிடமிருந்து ஒரு அறிவிப்பு அறிவிக்கப்படுகிறது. ஃபஜ்ர் தொழுகைக்கு தகவல் கொடுப்பதற்காக பிலால் அவர்கள் ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஒரு முறை ஆஜராகும் போது, ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவரிடம் கூறப்பட்டது. அப்போது பிலால் அவர்கள், அஸ்ஸலாத்து கைரும் மினன் நவ்ம், அஸ்ஸலாத்து கைரும் மினன் நவ்ம் என்று கூறினார்கள். பிறகு, ஃபஜ்ருடைய பாங்கில் இந்த சொற்களும் இணைத்துக் கொள்ளப்பட்டது; மேலும் இந்த வழிமுறை நிலைபெற்று விட்டது. இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், பிலாலே! இது எத்துனை அழகான சொற்களாக இருக்கின்றன! நீங்கள் உங்களது ஃபஜ்ர் பாங்கில் இதை இணைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மூன்று முஅத்தின் (பாங்கு சொல்லக் கூடியவர்) இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால், ஆபூ மஹ்ஸூரா, அம்ர் பின் இப்னு மக்தூம் ஆகியோர்.**

ஹஸ்ரத் பிலால் அவர்களைப் பற்றிய குறிப்பு இன்னும் கொஞ்சம் எஞ்சியுள்ளது. இன்ஷா அல்லாஹ் இனிவரும் காலத்தில் அது கூறப்படும்.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், ஜாமிஆ அஹ்மதிய்யா யூ.கே-வின் மாணவரான அன்பிற்குரிய ரவூஃப் பின் மக்சூது ஜூனியர் பெல்ஜியம், இஸ்லாமாபாத் மாவட்டத்தினுடைய முன்னாள் துணை அமீர் ஸஃபர் இக்பால் குறைஷி சாஹிப், செனிகலைச் சார்ந்த கண்ணியத்திற்குரிய **Kabine Kabaja Kate** காபீனே காபாஜா காட்டே சாஹிப், பாகிஸ்தான் சுப்ரீம்கோர்ட்டில் அட்வகேட்டாக இருந்தவரும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் லதீஃப் சாஹிப் ஆகிய மர்ஹூம்களுடைய நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். மேலும் மர்ஹூம்களுடைய அந்தஸ்துகளின் உயர்வுக்காகவும், பாவ மன்னிப்பிற்காகவும் துஆ செய்தார்கள். ஜுமுஆ தொழுகைக்கு பிறகு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைக்கப்படும் என்று கூறினார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ

وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ

ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

*(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)*